# 25 புதிய இ.போ.ச.பஸ்கள் வடக்கே வருகின்றன!


எவர் பிறைற் நீல சோப்
அதிர்ஷ்டலாபத் திட்டம்
பின்போடப்பட்டுள்ளது
முடிவுத் தேதி 31-10-70
50 எவர்பிறைற் சோப் (கிழியாத) உறைகளை அல்லது 50 பிறேமா லோட்டஸ் தேயிலை பக்கற் (2 அவு) உறைகளை சேர்த்து அனுப்பவும்.
100 உறைகளை அனுப்பியவர்களின் பெயர்கள் இருமுறை போடப்படும்.
பரிசுகள்: 1. றலி சைக்கிள்
2. டேபிள்பான்
3. கைக்கடிகாரம்
மற்றும் 50 ஆறுதல் பரிசுகள்
பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை.



Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன்: 389

மலர் 12
இதழ் 170
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 15 ஜமா. அவ் 26 வெள்ளிக்கிழமை [31-7-70]





10 எவர் பிறைற் சோப் மேல் உறைகளை சேர்த்து வியாபாரியிடம் கொடுத்து ஒரு சோப் இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை.


யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி பஸ்சேவை சீர்கேடு விரைவில் தீரவிருக்கிறது. இலங்கை போககுவரத்துச் சபைத் தலைவர் திரு. அனில் முனசிங்கா வட பகுதியில் நல்ல சேவையை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இருபத்தைந்து புதிய பஸ்கள் விரைவில் வடபகுதியில் சேவையிலீடுபடுத்தப் படவுள்ளன.

சமீபத்தில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கும், பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் விஜயம் செய்த இ. போ. ச தலைவர் திரு. அனில் தொழிலாளர்ப் பிரதிநிதிகளுடன் உரையாடியதுடன், நல்ல பஸ் சேவையை வட பகுதிக்கு அளிக்க என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிந்து சொன்னார்.

இதனைத் தொடர்ந்து வட பகுதிக்கு மேலும் பல பஸ்களை அனுப்புவதென்று இ. போ. ச தலைவரும், அமைச்சரும் முடிவு செய்ததாகத் தெரிகிறது. விரைவில் இருபத்தைந்து பஸ்கள் வடக்குக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கிறது. (உரு, நி

# அக்டோபர் மாதத்தின் பின் 5000 பேருக்கு ஆசிரியர் பதவி

## பல்கலைக்கழகங்களில் முக்கிய பாடங்கள் தாய்மொழியில்

### கல்வி அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு வியாழன்

**அக்டோபர் மாதத்திற்கு பிறகு ஐயாயிரம் பேருக்கு ஆசிரியர், பதவிகள் கிடைக்கவிருக்கின்றன, பட்டதாரிகளும் பட்டதாரிகள் அல்லாதவர்களும் இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

**அக்டோபர் மாதம் தொடக்கம் நாட்டிலுள்ள நான்கு பல்கலைக்கழகங்களிலும் சட்டம், மருத்துவம், பொறியியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் தாய்மொழிமூலம் போதிக்கப்படும்**

அக்டோபர் முதலாம் திகதி தொடக்கம் பல்கலைக்கழகங்களில் சட்டம், மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம் ஆகியதுறைகளில் பாடபோதனை தாய்மொழியிலேயே இடம்பெ[illegible]வேண்டும் என்று தெ[illegible]க்கும் அறிவித்தல்களை கல்வி [illegible] பல்கலைக்கழக [illegible]களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

[illegible] விண்ணப்பங்களைக் கோரவிருக்கின்றது. 2500 பட்டதாரிகளும், 2500 பட்டதாரிகளல்லாதவர்களும் புதிதாக ஆசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுவார்கள், மாணவர் ஆசிரியர்களை நியமிப்பது ஏற்கனவே ரத்துச்செய்யப்பட்டது தெரிந்ததே. இத்திட்

## மாவை ஆலய வழக்கு ஆகஸ்ட் 19-ல் விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவை ஆதீன கர்த்தா ஆலய நிர்வாகி ஆகியோருக்கு எதிராக, அட்டோர்ணி ஜெனரல் தாக்கல் செய்த வழக்கு நேற்றுக்காலையாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனாப் இஸ்மயில் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது

மனுதார் சார்பில், முடிக்குரிய புறக்டர் எஸ். கனகரத்தினம் ஆஜரானார் பிரதிவாதிகள் சார்பில் அட்வகேட் ஸி. சுந்தரலிங்கம் ஆஜரானார். விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

மாவட்ட நீதிபதி விசாரணையை, ஆகஸ்ட் மாதம் 19ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## அரவிந்தரின் 100-வது ஆண்டு விழா

சென்னை, ஜூலை 30

இந்திய குடியரசின வெள்ளி விழாவை 72-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டடுள்ளது.

இவ்விழாவின்போது மகரிஷி அரவிந்தரின் 100-வது தினவிழாவும் இடம்பெறவிருக்கின்றது. அரவிந்தர் வாழ்ந்த இடமகிய புதுச்சேரியில் அரவிந்தர் விழாவை நடாத்துவதற்கான சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

அரவிந்தரின் போதனைகளை மக்களுக்குப் போதனை செய்யும் இயக்கமும் ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது

## தீவுப்பகுதி தபால் சேவை தனியாரிடம் ஒப்படைப்பு

### நாளைமுதல் படகுசேவையில் மாற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வந்ததபால் சேவை நாளை முதல் தனியாரிடம் ஒப்ப[illegible]

நிற்கும் பின்னர் மாலை 1-45 மணிக்கு தபால் லோஞ் அனலைதீவிலிருந்து புறப்பட்டு எழுவைதீவு ஊடாக ஊர்காவற்றுறை வந்தடையும். மீண்டும் 4 மணிக்கு இதே படகு மீண்டும் அனலை[illegible]

## 'கூட்டுறவை மேலும் வளர்க்க வழி'

பண்டத்தரிப்பு, வியா,

'சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்குக் கூட்டுறவைப்[illegible]

தின விழா நாடகப் போட்டியில் 1ம் நாள் உரையாற்[illegible]

## இலங்கை நோக்கி வந்து காணமல் போன கப்பலை இன்னும் தேடுகின்றனர்

தூத்துக்குடி, ஜூலை 30

தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு சரக்கேற்றி வந்து இடையிற் காணமற் போன பாய்க்கப்பலை தேடுவதில் இந்திய அரசாங்கம் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

கிப்பான் என்னும் கப்பலும் அலிஸ் என்னும்விமானமும் தேடும் முயற்சியிலீடுபட்டுள்ளன. கொச்சியிலிருந்து தேடுதல் கப்பல் புறப்பட்டுள்ளது. இத்தேடுதல் முயற்சியில் இலங்கை அரசாங்கத்திடமிருந்துதேடுதல் படகுகளைப் பெறும்படியும் இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் 100அடி நீளமும் 20 அடி அகலமும் 10 அடி ஆழமும் கொண்டதாகும்.

## தனியார்துறைநிபுணர்களின் சேவையைபெற அரசுதிட்டம்!

### மந்திரிசபை பரிசீலிக்கும்

கோட்டை, வியாழன்

அரசாங்கதுறைக்கு தனியார் துறையில் உள்ள நிபுணர்களின் சேவையைப் பெறுவதற்கான புதிய திட்மொன்றை உள்நாட்டு, உள்ளூராட்சி பொதுநிர்வாக மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மந்திரி சபையின் பரிசீலனைக்கு விடத் தீர்மானித்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் தனியார் துறையில் உள்ள நிபுணரை அழைத்து தனது அமைச்சின்கீழுள்ள திணைக்களமொன்றுக்கு தலைமை தாங்கும்படி கூற மந்திரிக்கு அதிகாரமுண்டு.

இத்திட்டத்தின்கீழ் தனியார்துறை நிபுணர்களை கொந்தருத்து அடிப்படை வேலைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதிருக்கும் சட்ட திட்டத்தின்படி இலங்கை[illegible] களுக்கு நியமனம்பெறமுடியாது.

## சப்பரத் திருவிழா

யாழ்ப்பாணம் வெள்ளி

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் 5ம் திருவிழாவானசப்பரதிருவிழா இன்று. மாலை 6 - 6 30 மணிவரை வித்துவான் திரு கே.கே. நடராஜா அவர்களினல் பெரிய புராணவிரிவுரைத்தொடரில் 'பூம்பாவை' என்னும்பொருள்பற்றிகதாப்பிரசங்கமும் மாலை 6-30-7-30மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் அவர்களினல் 'மங்கயர்க்கரசியார்' என்னும் பொருள் பற்றிய கதாபிரசங்கமும் இரவு 7.30 மணிக்கு வசந்தமண்டபபூசையும் சுவாமி இடபவாகனத்துடன் சப்பரததில் வீதிவருதலும் இடம்பெறும் இரவு 8.15- 9.45 மணிவரை [illegible]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக தீவுப்பகுதி மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தினரால் நடாத்தப்பட்டு வந்த தபால் சேவை நாளை முதல் தனியாரிடம் ஒப்படைக்கப்படுகிறது. நாளையிருந்து அனலைதீவு-ஊர்காவற்றுறை படகு சேவையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக தபால் கொந்தராத்துக்காரர் தெரிவிக்கின்றனர்

அனலைதீவிலிருந்து காலை 6-30 மணிக்கு தபால் படகு புறப்பட்டு ஊர்காவற்றுறை செல்லும். பின்னர் காலை 8 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து புறப்பட்டு எழுவைதீவு தபால்களைவிநியோகிக்கும். பின்னர் அனலைதீவு சென்று அங்கு தங்கி நிற்கும் பின்னர் மாலை 1-45 மணிக்கு தபால் லோஞ் அனலைதீவிலிருந்து புறப்பட்டு எழுவைதீவு ஊடாக ஊர்காவற்றுறை வந்தடையும். மீண்டும் 4 மணிக்கு இதே படகு மீண்டும் அனலைதீவு செல்லும்.

திட்டமிட்டபடி காலை 8 மணிக்கே ஊர்காவற்றுறையிலிருந்து தபால்படகு புறப்பட்டால் நேரத்துக்கே தபால்களை பெற்றுக்கொள்ளமுடியுமென அனலைதீவு, எழுவைதீவுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நயினாதீவு- குறிகட்டுவான் தபால் விநியோகக் கொந்தராத்தும் தனியாரிடம் நாளை முதல் ஒப்படைக்கப்படுகிறது.

## 'கூட்டுறவை மேலும் வளர்க்க வழி'

பண்டத்தரிப்பு, வியா.

'சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்குக் கூட்டுறவைப் பற்றி எடுத்துரைப்பதன் மூலம் கூட்டுறவை மேலும் வளர்க்க முடியும். இதற்காகவே கூட்டுறவு தினவிழாவில் பாடசாலை மாணவர்களுக்கு அதிக நிழ்ச்சிகள் ஒதுக்கப்பட்டன. சிறுவயதிலிருந்து இவ்வுணர்ச்சியில் வளருமானால் எந்த தீய சக்தியும் அவர்களை மேற்கொண்டு எதனையும் செய்ய முடியாது'.

இவ்வாறு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவு தின விழா நாடகப் போட்டியில் 1ம் நாள் உரையாற்றிய ... வலி ஐக்கிய மேற்கு ...ப்பத்தலைவர் திரு. இ. இராசரத்தினம் உரையாற்றினார்.

இவ்விழாவிற்கு வடபகுதி கல்வி அதிபர் திரு. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பளை, சங்கானை, சுன்னாகம் ஆகிய இடங்களைச் சேர்ந்த கூட்டுறவு சங்கங்களின் நாடகப் போட்டி இடம் பெற்றது.

## இன்று நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

திரு மு தளையசிங்கம் எழுதிய 'போர்ப்பறை' திரு மு. பொன்னம்பலம் எழுதிய அது ஆகிய இரு நூல்களின் வெளியீட்டுவிழா இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் டாக்டர் வாமதேவா தலைமையில் நடைபெறவிருக்கிறது. கலை இலக்கியப் பெருமன்றத்தின் ஆதரவில் இவ் விழா நடைபெறுகிறது.

...பாடசாலைகளில் தாய்மொழி... யிலேயே இடம்பெ...வேண்டும் என்று தெ...க்கும் அறிவித்தல்களை கல்வி அமைச்சர் பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கான மான்யக்குழு சம்ப...மான நகல்சட்டமொன்றையும் கல்வி அமைச்சர்விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரிகின்றது. இத்தகவல்களை கல்வி அமைச்சர் இன்றுபத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

### 5000 பேருக்கு ஆசிரியர்கள் பதவிகள்

பட்டதாரிகள், பட்டதாரிகளல்லாதவர்கள் ஆகிய இருபிரிவினரிலுமிருந்து 5000 பேரைத் தெரிந்து ஆசிரியர் பதவிகள் வழங்குவதற்கு கல்வி அமைச்சு முடிவுசெய்திருக்கின்றது. அக்டோபர் முதலாம் திகதிக்குப்பின்னர் இந்த நியமனங்கள் இடம் பெறும். இந்தப்பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து கல்வி அமைச்சு விரை... பட்டதாரிகள் ...லாதவரும் புதிதாக ஆசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுவார்கள், மாணவர் ஆசிரியர்களை நியமிப்பது ஏற்கனவே ரத்துச்செய்யப்பட்டது தெரிந்ததே. இத்திட்டம் மாவட்டரீதியில்செயல்படுத்தப்படும் என்று தெரிகின்றது.

இத்திட்டத்தின்கீழ் தனியார்துறை நிபுணர்களை கொந்தருத்து அடிப்படை வேலைக்கு அமர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதிருக்கும் சட்டதிட்டத்தின்படி இலங்கை நிர்வாக சேவைக்கு புறம்பான எவரும் அரசாங்க சேவையில் முக்கிய பதவி...

...ருள் பற்றிய கதாபிரசங்கமும் இரவு 7.30 மணிக்கு வசந்தமண்டபபூசையும் சுவாமி இடபவாகனத்துடன் சப்பரத்தில் வீதிவருதலும் இடம் பெறும் இரவு 8.15- 9.45 மணிவரை பண்டிதர் ஆசிரியர் திரு. ஆ. கனகசபை அவர்களின் இன்னிசைக்கச்சேரியும் நிகழும்

## அரசாங்க ஊழியருக்கு புதிய இடமாற்றத் திட்டம

கொழும்பு, வியா

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதியிலிருந்து சகலதர அரசாங்க உத்தியோகத்தர்களும் புதிய முறையில் இடமாற்றம் செய்யப்படுவர். இத் திட்டத்தை பொதுநிர்வாக அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தயாரித்துள்ளார். அரசாங்கம் இதை அங்கீகரித்துள்ளது.

இத் தகவலை அமைச்சர் இன்று செய்தி நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

ஒரே இலாகாவில்மிகச்சிறந்தது, நடுத்தரமானதுகஷ்டமானதென்ற வகையில் இடங்கள் பிரிக்கப்படும். இந்த ரீதியில் தரத்தில் சிறந்த இடத்தில் ஒருவர் நாலுஆண்டுகாலம் கடமையாற்றுவர். இரண்டாந்தர இடத்தில்3 ஆண்டுகள்பணிபுரிவர். மூன்றாவது இடத்தில் 2 ஆண்டுகள் மட்டுமே பணிபுரியும் வசதி கொடுக்கப்படும்.

இடமாற்றத்துக்கான ஒவ்வோர் ஆண்டிலும் ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்( அக்டோபர் மாதம் 15ம் திகதி இடமாற்ற ஊழியருக்கான பட்டியல் தயாராகி விடும்,

இடமாற்ற உத்தரவுஒவ்வொருவருக்கும் நவம்பர் மாதம் 1-ம் திகதி ஊழியர்களுக்கு அறிவிக்கப்படும்.

சிறு ஊழியர்களுக்கு மாவட்டங்களை அனுசரித்தே இடமாற்றங்கள் நடைபெறும்.

## ஈரானில் பயங்கர பூகம்பம்

டெக்கிரான். ஜுலை, 30

வட ஈரானில் பூகம்பத்தினால் பலத்தசேதம் ஏற்பட்டிருக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு பூகம்பம் ஏற்பட்டதாகவும் இந்த இந்த இடம் டெக்கிரானிலிருந்து 300 மைல் தொலைவிலுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தில் 1968ம் ஆண்டு மிகப் பெரிய பூகம்பம் ஒன்று ஏற்பட்டதனால் ஏறத்தாள பதினோராயிரம்பேர் கொல்லப்பட்டனர்.

இப்போதைய பூகம்பத்தில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டதாகவும் 70 பேர் காயமடைந்திருக்கலாமென்றும் முதலில் வந்த செய்திகள் கூறின.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் ஈழத்துச்சிதம்பர ஆலயத்தில் இன்று 21ம் நாள் மண்டலாபிஷேகம் நடைபெறும். பகல் 10 தொடக்கம் சௌந்தராம் சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் பூரண புஸ்கலை சமேத ஐயனாருக்கும் விசேட அபிஷேகஆராதனைகள் நடைபெறும்,

### மாங்குளம் முக்கொலை வழக்கு

# "சுப்பையா வாடிக்குவந்தபோது நான் முதலில் எழும்பினேன்"

யாழ்ப்பாணம், வெள்ளி

'காயமடைந்த சுப்பையா சத்தம்போட்டுக் கொண்டு வந்ததினால் தான் முதலில் எழும்பினேன், அவர் பக்கத்தில் விழுந்தார் மூன்றுபேரை கொலைசெய்துபோட்டார்கள்; என்னைக் காப்பாற்றுங்கள் என்று 'சுப்பையா சொன்னார். அவர்வந்தபோது எனதுவாடியில் பத்து பன்னிரண்டுபேர்கள் இருந்தனர். நான் கிராம சேவகரிடம் போனேன்.

மாங்குளம் முக்கொலை வழக்கில் சாட்சியமளித்த சின்னப்பொடி நாகன், எதிரிகளின் வழக்கறிஞரால் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ எல் எஸ். சிறிமானே முன்னிலையில் 5-வது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மாங்குளத்தில் 68-ம் ஆண்டு ஜூலை 2-ம் தேதி செல்லத்துரை, சின்னையா பால்ராஜ் ஆகியோரை கொலை செய்ததாக வில்லியம், பியரத்ன ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

குறுக்கு விசாரணையின் போது சின்னப்பொடி நாகன் மேலும் கூறியதாவது: சுப்பையா, வந்த வாடிக்கு தான் போகவில்லை எனது வாடியிலிருந்து மற்ற வாடியை பார்க்கமுடியும் இரவானதால்பார்க்க முடியவில்லை.

வழ: கிராமசேவகரிடம் நீர்போகமற்றவர்கள் செல்லத்துரை வாடிப்பக்கம் ஓடினார்களா?- தெரியாது.

வழ: வாடிக்குஎப்ப திரும்பிவந்தீர்கள்? கிராம சேவகர் பொலிசுக்கு போன் பண்ணினார் நான் றேட்டில் பொலிசாரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். கிராமசேவகர் தம்பிராசா மாடிக்குச் சென்றார். சுப்பையா வாக்குமூலத்தை கிராமசேவகர் பதிந்தார்.

வழ: அதன் பின் பொலிஸுக்கு போன் பண்ணமாங்குளத்திற்கு வந்தார்?- ஆம்

வழ: விதானையார் செல்லத்துரை வாடிக்கு போனாரா?-ஆம் பின் போன் பண்ணபோனார் நான் செல்லத்துரை வாடிக்குப்போகவில்லை சுப்பையாவின் காயங்கள் கட்டப்பட்டிருந்தது. யார்காயத்தை கட்டினார்கள்என்று தெரியாது.

(விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.)

## வியாபாரிகளுக்கு முக்கிய அறிவித்தல்

வலிகாமம் வடக்குப் பகுதிக் காரியதிகாரி பிரிவிலுள்ள ஐக்கிய பண்டசாலைகளையும், உத்தரவுபெற்ற அரிசி வியாபாரிகளையும் தவிர்ந்த ஏனைய மொத்த - சில்லறை வியாபாரிகள், தமக்குத் தேவையான அத்தியாவசிய பங்கீட்டுப் பொருள்களைவேறெந்த இடங்களிலும் வாங்க முடியாத நிலைமை ஏற்பட இருப்பதாலும், சமாசத்தில் மட்டுமே, வாங்கக் கூடிய வாய்ப்பு உண்டாக இருப்பதாலும், தங்கள் உத்தரவுப் பத்திரங்களை (லைசன்ஸ்) 15-8-70-க்குப் பிந்தாமல் சமாசத்தில் காண்பித்துப் பதிவித்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்கப்படுகின்றனர்.

கூட்டுறவுச்சேவையிலுள்ள

க. இராமச்சந்திரன்,
நிர்வாகக் காரியதரிசி.

சுன்னாகம்,
28-7-70. 2388

### இஸ்ரேல் உறவு முறிப்பு:

# பிரிட்டிஷ் கம்பனிகள் கடும் எதிர்ப்பு

கோட்டை, வெள்ளி

இஸ்ரேலுடனான ராஜீய உறவைத் துண்டிப்பதென்ற இலங்கை அரசாங்கத்தின் முடிவைத் தொடர்ந்து இஸ்ரேலுடன் தொடர்புள்ள பிரிட்டிஷ் கம்பனிகள் பல இலங்கையின் பொருளாதாரத்துக்கு இடையூறு செய்யும் நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டிருப்பதாகப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா மந்திரிசபைக்குத் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் கூட்டணி அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்திலும் தெரிவிக்கப்பட்டிருந்ததற்கிணங்க இஸ்ரேலுடனான ராஜீய உறவைத் துண்டித்துக் கொள்ளும் நடவடிக்கைகளை அரசங்கம் மேற்கொண்டு இஸ்ரேல் தூதரகத்தை வெளியேறும் படி அரசாங்கம் கேட்டிருந்தது.

இஸ்ரேலுடனான ராஜீய உறவைத் துண்டித்துக் கொள்ளும் இலங்கையின் செயலைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரத்துக்கு இடையூறு செய்யும்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை பஸ் சேவை மாலை 6 மணிக்குப் பின்?

பண்டத்தரிப்பு, வியா.

இப்பகுதியில் பஸ்சேவை மிகவும் சீர்கேடானநிலையில் இயங்கிவருகிறது. இப்பகுதியைச் சேர்ந்த கல்லூரிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் காலை 10 மணிக்கே பாடசாலை வந்துசேரக் கூடியதாயிருக்கிறதாம். இச்சம்பவங்கள் பற்றி யாழ்ப்பாணம் பஸ்நிலையப் பிரயாணிகள் அறிக்கைப் புத்தகத்திலும் அடிக்கடி பதிவு செய்யப்பட்டுள்ளது. வயதுவந்த பெண்கள் மாலை 6 மணியின் ...ன்பும் பாடசாலைச் சேவை பஸ்சுக்காக காத்துநிற்கின்றனராம். பாடசாலை மாணவர்களுக்கான பஸ்சேவையும் சீர்கேடானநிலையில் இருப்பதாக தெரிகிறது.

## 150 ஆயிரம் தொன் அரிசி!

கொழும்பு, வியாழன்

பர்மா மேலதிகமாக இலங்கைக்கு 150 ஆயிரம் தொன் அரிசியை வழங்கவிருக்கிறது. அடுத்த மாத முற்பகுதியிலிருந்து இந்த அரிசியை பர்மா வழங்கும்.

### உருத்திரபுரம் பெண்கடத்தல் வழக்கு:

# எதிரிகள் மூவர் விடுதலை:

## 1-ம் எதிரி மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை

மட்டுவில், வெள்ளி

உருத்திரபுரம் பெண்கடத்தல் வழக்கில் எதிரிகள் மூவரை சாவகச்சேரி மஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா விடுதலைசெய்து முதலாம் எதிரி இராமு இரத்தினத்தை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு நிற்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்

இவ்வழக்கில் உருத்திரபுரத்தைச்சேர்ந்த 21 வயதான சந்திராவதியைவிவாகமாகிய ஒரு வாரத்தில் பலாத்காரமாக கணவனிடமிருந்து கடந்த டிசம்பர் மாதம் 14ந் திகதி கடத்திச் சென்றதாக புத்தூரைச் சேர்ந்த இராமு இரத்தினம் இரத்தினதுரை, தெய்வேந்திரன். செல்வரத்தினம்ஆகியோர்மீது கிளிநொச்சிப்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**REGAL JAFFNA**
Daily 4-45, 7& 9-45-P.M.
Poya, Pre-poya 4 Shows
Rod Taylor, Claudia Cardinale
in
THE HELL WITH HEROES
(Adults only)


## ஒருநாள் சம்பளம்

புலோலி, வியாழன்
நாட்டைக் காக்கும் நிதிக்கு புலோலி மெதடிஸ்த அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் ஆசிரியர்களும், ஊழியர்களும் தமது ஒருநாள் அடிப்படைச் சம்பளத்தை வழங்கியுள்ளனர்.


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30 மணி,
போயா, பிரிபோயா 2-30
ஜெய்சங்கர்- விஜயநிர்மலா
நடித்த
**சிரித்த முகம்**


**MANOHARA JAFFNA**
Daily 4-45, 7-00 & 9-45 p.m
Poya-Prepoya 10-30 a.m.
Graig Stevens
in
GUNN... Number One
(Strictly for adults)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத்தமிழ்க் காவியம்'
# துணைவன்
கதை வசனம் பாலமுருகன் — சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

ராஜா (யாழ்ப்பாணம்) 10-30, 2-30, 6-30, 10-00 மணி
சரஸ்வதி (திருமலை) 6-15, 9-30 மணி
என்.எஸ் கிருஷ்ணன், ரி.ஏ.மதுரம்
ஜெமினி கணேசன், டெய்ஷி ராணி
மற்றும் பலர் நடித்த



# 67-ல்
# என். எஸ். கிருஷ்ணன்
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)
பிலிம் (f) பெயர் பத்திரிகை டெல்லியில் நடாத்திய நட்சத்திரக் கலைவிழாவும் கலரில் காண்பிக்கப்படும்.


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 31—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பண்ணூரிந்தமிழ், 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

## கனிட்ட பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி
பலாலி கனிட்ட பல்கலைக்கழக இல்லங்களுக்கான வருடாந்தவிளையாட்டுப்போட்டி இன்று பலாலி விசேட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விளையாட்டரங்கில்நடைபெறும். பலாலி கனிட்ட பல்கலைக்கழக பகுதி நேரவிரிவுரையாளர் கலாநிதி கே. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்குவார்.

## குரும்பட்டக் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி
இம்மாதம் 3-ம்திகதி ஊர்காவற்றுறை குரும்பட்டக் கொடியேற்றம் நற்சிந்தை நிச்சிந்தையுடன் ஆரம்பமாகும்.


**வெஸ்லி சினிமா** மானிப்பாய்
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30 மணி
சத்தியன், ஷீலா, மது நடித்த
# செம்மீன்
(ஈஸ்ட்மன் கலர் - மலையாளம்)

# இரு கோடுகள் பரிசுப் போட்டி
30-7-70 முதல் ஆரம்பம்
1-வது பரிசு: உஷா தையல் மிஷின்
(அன்பளிப்பு: ராணி சினிமா)
2-வது பரிசு: கே. டி. கே. மின்சார விசிறி
(அன்பளிப்பு: (S R.S. மூவிஸ் — கஸினோ தியேட்டர் மாத்தளை)
3-வது பரிசு: ஹிரோ சைக்கிள்
(அன்பளிப்பு: பாலக்காடு ஆர். வி. ஜி. பீடிக் கம்பனி)
ஆறுதல்பரிசு: ஒரு சோடி குத்துவிளக்கு
(அன்பளிப்பு: சூரியப்பிரகாஸ் றைகிளீனேர்ஸ்)
மண்ணெண்ணை அடுப்பு
(அன்பளிப்பு: சித்திராலயா ஸ்ரூடியோ, யாழ்ப்பாணம்)
இன்னும் பல ஆறுதல் பரிசுகளுமுண்டு. விபரங்களுக்கு மனேஜருடன் தொடர்புகொள்ளவும்
5-வது வெற்றிவாரம் ராணி சினிமாவில்
# இரு கோடுகள்


## தேவை

குருக்கள்:
"சைவ அனுஸ்டானமும் எல்லாக் கிரிகைகளும் தெரிந்த பிராமணக்குருக்கள் ஒருவர் உதவி ஐயர் ஒருவருடன் தேவை. குடும்பஸ்தராயிருத்தல் வேண்டும் முன்னைய தேவஸ்தான நற்சாட்சிப்பத்திரங்களுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு 10-8 70க்கு முன் விண்ணப்பிக்கவும். போக்குவரத்துச் செலவுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது தலைவர், ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், மாத்தளை." 3030

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை பணம் உடனே கொடுப்போம், எழுதுங்கள். வெஸ்டன் றேட்ஸ், தபால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 3011

வண்ணார் பண்ணையில் காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதிக் கண்மையாக குடியிருக்க வீடு தேவை. தொடர்பு கொள்ளவும். ஆனந்தம், 31, ஒட்டுமடம்வீதி, வண்ணார்பண்ணை. 3026

பிறசியர்ஸ், தைப்பதில் நல்ல அனுபவமிக்க பெண்கள் தேவை. கீழ் உள்ள முகவரிக்கு தொடர்பு கொள்க. வாசனை திரவியங்கள் அடைப்பதற்கு சிறு பெண்பிள்ளைகள் தேவை போயா தினங்களில் மாலை 3 மணி முதல் 5 மணிவரை நேரில் வரவும். O. B. இன்டஸ்றீஸ், 2 பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் 3029

## பழையமாணவர் சங்கஉறுப்பினர்

சங்கானை, விழாயன்
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் திரு. க. சதானந்தன் தலைமையில் சங்கானைபோதனுகழக நிலையத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. சதானந்தன், போசுஷகர் க. இரத்தினசபாபதி, செயலாளர் சோ. சி. குலநாயகம் பொருளாளர் த சுப்பிரமணியம் 11 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். வித்தியாலய வளர்ச்சிக்குத் துரித நடவடிக்கை மேற்கொள்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நாரந்தனை-பண்ணை வீதியில் உதருப்பிட்டி நெற்பரப்பு 15 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு. வேண்டுவோர் கரம்பன் சி. கந்தையா நொத்தாரிஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 3017

யாழ்ப்பாணம் கச்சேரி-நல்லூர் வீதியில் நான்கு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. லான்ட் இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3014

செம்மணி றேட்டருகில் 50 பரப்பு நெல்வயல் விற்கப்படும். திருநெல்வேலி சிவன்கோயில் றேட்டு 36-ம் வீட்டில் விசாரிக்கவும். 3019

நாரந்தனை-பண்ணை வீதியில் உதருப்பிட்டி நெற்பரப்பு 15 விஸ்தீரணம் கொண்ட ஆதனம் விற்பனைக்குண்டு வேண்டுவோர் கரம்பன் சி. கந்தையா நொத்தாரிஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். 3017

### வாடகைக்கு

தளபாடத்துடன் கூடிய கடையொன்று கே.கே.எஸ். வீதியில் வாடகைக்கு உண்டு. விபரத்துக்கு: எம். கணபதிப்பிள்ளை, 379, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3031

## பரிசளிப்புவிழா

யாழ்ப்பாணம்; வெள்ளி
சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி தாபகர்தினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமாலை நடைபெறவிருக்கிறது. மன்னார் அரசாங்க அதிபர் திரு. சு. கதிர்காமநாதன் பரிசளிப்புப்பேருரை நிகழ்த்துவார். திருமதி கதிர்காமநாதன் பரிசில்கள் வழங்குவார். வடபிரதேச வித்தியாதிபதி திரு. வெ. சங்கரலிங்கம் தலைமை தாங்கி தாபகர் ஞாபகஉரை நிகழ்த்துவார்.

## இடமாற்றம்

உடுப்பிட்டி, வியா.
வவனியா பட்டிக் குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கே. லோகநாதன் ஆகஸ்ட்மாதம் முதலாம் திகதி முதல் வதிரி அரசினர் மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு இடமாற்றம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கதை வசனம் பாலமுருகன் சங்கீதம் K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

இரு கோடுகள்

உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். வித்தியாலய வளர்ச்சிக்குத் துரித நடவடிக்கை மேற்கொள்வதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. கே. லோகநாதன் ஆகஸ்ட்மாதம் முதலாம் திகதி முதல் வதிரி அரசினர் மெதடிஸ்த மிஷன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

# இன்று முதல்!

இலங்கையில் தயாரிக்கப்பட்ட

மீனு மூவிஸாரின்

ஸ்டூடியோ:- ஆர். டி. இலங்கை




# வின்ஸர்
(யாழ்ப்பாணம்)

# செல்லமஹால்
(கொழும்பு)

# ஈரோஸ்
(பாமன்கடை)

# நெல்சன்
(திருகோணமலை)

# கிங்ஸ்
(நீர்கொழும்பு)

# இம்பீரியல்
(மட்டக்களப்பு)

மற்றும் சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் காண்பிக்கப்படுகின்றது.

டைரக்‌ஷன்

W.M.S. தம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திராவுக்கு எதிரான அவநம்பிக்கைப் பிரேரணைதோல்வி

## "ரஷ்யாவுக்கு இந்தியா அடிமையாகிறதென்பதுபொய்"

புதுடில்லி, ஜூலை 30
திருமதி இந்திராகாந்தியின் அரசாங்கத்துக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 106 வாக்குகளால் தோல்வியடைந்தது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து 243 பேரும் ஆதரித்து 137 பேரும் வாக்களித்தனர். பன்னிரண்டுபேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

திரு. நிஜலிங்கப்பா தலைமையிலான 'சிண்டிகேற்' காங்கிரசைச் சேர்ந்தவர்கள் சிலரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்துவாக்களித்தனர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் சில அங்கத்தவர்கள் ஆகியோர் பிரேரணையை எதிர்த்துவாக்களித்தனர். சுயேச்சை உறுப்பினர்களில் 13 பேர் பிரேரணைக்கு எதிராகவும் ஐந்து பேர் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

### இந்திராவின் மறுப்பு

நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது நடைபெற்றவிவாதத்தில் எதிர்க்கட்சியினர் கூறிய குற்றச்சாட்டுகளுக்குப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பதிலளித்தார்.

"இந்தியா சோவியத்யூனியனுக்கு அடிமைப்படுகிறதென்று கூறப்பட்டதை "முழுப்பொய்" என்று இந்திரா கூறினர். இந்திய அரசு தனக்கென ஒருபாதை வகுத்து அந்த வழியில் செல்லக்கூடிய சக்தியுடையது என்று அவர் சொன்னர். சகல அதிகாரங்களையும் தாமே வைத்துக்கொள்ள முயற்சி செய்வதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டையும் பிரதமர் மறுத்தார்.

நடிகை ஷெரான் கொலைவழக்கு:

## சாட்சி கோர்ட்டில் தடுமாறினர்!

லொஸ்ஏஞ்ஜல்ஸ், ஜூலை 30
பிரபல சினிமா நடிகை ஷெரான் றேற் கொலை வழக்கில் சாட்சியமளித்துக் கொண்டிருந்த, இரு குழந்தைகளின் தாயான 21 வயது திருமதி லிண்டா கஸ்பியன் கோர்ட்டில் தடுமாறினர்!

அந்தக் கொலைகள் பற்றி லிண்டா வர்ணிக்கும் போது "அந்தக் கோரக் காட்சியைச் சகிக்க முடியாது;என்னல் அதனை எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை" என்று கூறினர். இவர் முடிக்குரிய தப்பு சாட்சியாவார். ஷெரானின் மலைச்சாரலிலுள்ள வீட்டின் வெளியேயும் உள்ளேயும் ஐவர் இந்த வழக்கில்கொலை செய்யப்பட்டுக் கிடந்தது தெரிந்ததே.

முடிக்குரிய தரப்பு சாட்சியாக இப்போது மாறியிருக்கும் திருமதி லிண்டா இவ்வழக்கில் முதலில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

இவ்வழக்கில் நான்கு பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. சார்ஷ் மான்ஸ்ஸன் என்ற 3 வயது 'கிப்பியே' இந்த நான்கு பேருக்கும் தலைவராவார்.

கோர்ட்டில் கொலைசம்பந்தப்பட்ட முக்கிய கட்டத்தை வர்ணிக்கும் போதே சாட்சி லிண்டா மயங்கி விழுந்தார். விசாரணை தொடர்கிறது.

## கருணாநிதிக்கு திருவையாறு அழைப்பு

திருவையாறு, ஜூலை 30
அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15ந் திகதி முதல் 4 நாட்கள் திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜரின் 124வது ஆண்டு ஆராதனை மகோற்சவத்தை தொடக்கிவைக்க முதலமைச்சர் திரு. மு, கருணாநிதியை அழைப்பதென்று ஸ்ரீதியாகப்பிரும்ம மகோற்சவ சபையின் நிர்வாகக் குழு முடிவுசெய்திருக்கிறது.

---

## பாதுகாப்புசபை தீர்மானம்

நியுயோர்க், ஜூலை 30
தென்மேற்கு ஆபிரிக்காவை தென்னபிரிக்காதொடர்ந்து நிர்வகித்து வருவது சட்டவிரோதமானதென்று பிரகடனம் செய்யுமாறு தென்னபிரிக்காவுடன் ராஜீய உறவு வைத்துள்ள நாடுகளையும் அதனுடன் நட்புறவு கொண்டுள்ள நாடுகளையும் கோரும் தீர்மானமொன்று ஐ. நா. பாதுகாப்புச்சபையில் நிறைவேறியது. தீர்மானத்தை 13 நாடுகள் ஆதரித்தன. எந்த நாடும் எதிர்க்கவில்லை. ஆனல் பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன், போலந்து ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

மேற்கு ஆசியா

## அமெரிக்க யோசனையை லிபியாவும் ஏற்றது

கெய்ரோ: ஜூலை 30
மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அமெரிக்கா கடைசியாகத் தெரிவித்த சமாதான யோசனைகளை மற்றொரு அரபுநாடான லிபியாவும் ஏற்றுக்கொண்டுள்ளது. சூடானும் இதை ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. ஐக்கிய அரபுக் குடியரசு, ஜோர்டான் ஆகியவைகளும் அமெரிக்காவின் யோசனைகளை சில நிபந்தனைகளுடன் ஏற்றுக்கொண்டிருக்கின்றன ஐக்கிய அரபுக் குடியரசு, ஜோர்டான் ஆகியவைகளுக்கு லிபியாவும் சூடானும் ஆதரவளித்துள்ளன.

அமெரிக்காவின்சமாதான யோசனைகளை எதிர்த்து ஈராக்கில் அரபுக் கொமாண்டோக்கள் பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தினர்.

கெய்ரோவில் இயங்கிவந்த அரபுக்கொமாண்டோக்களின் வானெலி நிலையங்கள் இரண்டை ஐக்கிய அரபுக் குடியரசு அரசாங்கம் தற்காலிகமாக மூடியது. சம்பந்தமாக அரபு கொமாண்டோஸ்தாபனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் அரபுக் குடியரசுத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக கெய்ரோ போய்ச் சேர்ந்திருக்கிறர்.

### இஸ்ரேலில் நெருக்கடி

அமெரிக்காவின் யோசனைகள்பற்றி இஸரேல் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை திருமதி கொல்டாமெயரின் மந்திரிசபையில் இந்த யோசனைகள் சம்பந்தமாக நெருக்கடி தோன்றியிருப்பதாகவும் ஆறுமந்திரிகள் மந்திரி சபையிலிருந்து வெளியேறக்கூடு மென்றும் கூறப்படுகிறது.

### ஐ. நா. ஏற்பாடுகள்

அமெரிக்காவின் யோசனைகளை அரபுநாடுகள் முழுதும் ஏற்றதும் மேற்காசிய அமைதிக்கான ஐ. நா. விசேஷ தூதர் டாக்டர் குனர் ஜாரிங் மேற்காசியாவுக்குச் சென்று போர் நிறுத்தத்தை மேற்கொள்ளவும் அமெரிக்க யோசனைகளைச் செயல்படுத்தவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ஐ. நா. உதவித் தலைமைக் காரியதரிசி டாக்டர் ரால்வ் பஞ்சே நியூயோர்க்கில் தெரிவித்தார்.

நேற்று

கள் நேற்று மீண்டும் அரபுக் குடியரசு இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்தியதாக டெல்அவிவ் செய்தியொன்று கூறுகிறது. ஜோர்டான் எல்லையில் இஸ்ரேலிய காவல்படையினர்மீது அரபுக் கொமாண்டோக்கள் தாக்குதல் நடத்தியதில்இருவர் மாண்டதாக கொமாண்டோக்கள் தெரிவித்தனர்.

---

## கல்லூரியில் விஷமிகள் செயல்

சங்கானை, வியாழன்
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் இரவுநேரத்தில் இனந்தெரியாத நபர்கள் புகுந்து அங்கிருந்த தளபாடங்கள், கரும்பலகைகள் ஆகியவற்றையும் மற்றும் பாடசாலை வழவிலுள்ள வாழைகளையும் வெட்டிச் சேதப்படுத்தியுள்ளனர். சங்கானைப் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

கனிஷ்ட பல்கலைக்கழகம்

## ஆகஸ்ட் முதல் 'பொலிரெக்னிக்ஸ்'

கோட்டை, வியாழன்
சகல கனிஷ்ட பல்கலைக் கழகங்களும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து பொலிரெக்னிக்ஸ் என்னும் பெயருடன் இயங்கும் இத் தகவலை கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தினுல் குளியாப்பிட்டியா, தெகிவளை, பொல்கொல, கேகாலை, காலி, பளை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட கனிஷ்ட பல்கலைக் கழகங்களில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

பொல்கொலையில் அமைந்துள்ள கனிஷ்ட பல்கலைக்கழகத்தில் பெண்களும், தெகிவளை, பலாலி பல்கலைக்கழகங்களில் ஆண்-பெண் இருபாலாரும் பயிற்சி பெறுகின்றனர். ஏனைய மூன்றிலும் ஆண்கள் மட்டும் பயில்கின்றனர்.

---

## கலையரசு பாராட்டு

பண்டத்தரிப்பு, வியா.
வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் ஆதரவில் சர்வதேச கூட்டுறவு தின விழாவை யொட்டி நடைபெற்ற நாடகப் போட்டியில் 1-வது இடத்தைப் பெற இளவாலை கன்னியர்மட ஐக்கிய பண்டகசாலையினர் நடித்த 'என்தலையில்' என்னும் நாடகத்தைக் கலையரசு சொர்ணலிங்கம் பாராட்டினர் தந்தையாக நடித்த மனேன் சிறந்த நடிகர் என்ற பாராட்டைப் பெற்ருர். இவர் இளவாலை மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகிருர்.

---

பருத்தித்துறை நகரசபை மீது

## கசாப்புக்கடைகாரர் வழக்குத் தொடருவர்?

உடுப்பிட்டி, வியாழன்
பருத்தித்துறையிலுள்ள கசாப்பு நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து கசாப்புக் கடைக்காரர்கள் பருத்தித்துறை நகரசபைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளதோடு நகரசபைமீது வழக்குத் தொடருவதற்காக முன்றிவித்தல் கொடுத்துள்ளனர்.

பிரஸ்தாப கசாப்பு நிலையம் கடந்த 23 வருட காலமாகப் பருத்தித்துறையில் இருந்து வந்த இடத்தை விட்டு கோரியடியில் இருக்கும் கன்னியாஸ்திரி மடத்திற்கு முன்னல் மாற்றியமைத்ததையிட்டு அப்பகுதி மக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபரின் உத்தரவின் பேரில் தற்காலிகமாக இடமாற்றப்பட்ட கசாப்பு நிலையமும் மூடப்பட்டுவிட்டது. தற்போது கசாப்பு நிலையம் அங்குமில்லாமல் இங்குமில்லாமல் ஒரேயடியாக மூடப்பட்டுவிட்டதாம்.

இதனுல் 3 குத்தகைக்காரர்கள் நகரசபையிடமிருந்து 2000 ரூபா நஷ்டஈடும், தொடர்ச்சியாக நாள் ஒன்றுக்கு 75 ரூபா வீதம் தரும்படியும் கோரியுள்ளனர். நகரசபை தமது இக்கோரிக்கைக்கு ஆகஸ்ட் 30-ந் திகதிக்குமுன் இசையாவிடில் வழக்குத் தொடரப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

---

## இன்றைய பலன்

ஆடி மாதம் 15-ம் திகதி
[31-7-70]

மேஷம்- நீண்டநாள்

திருநெல்வேலி

## சைவ முன்னேற்ற கழகம்

திருநெல்வேலி, வியாழன்
திருநெல்வேலி சைவ முன்னேற்றக்கழகம் சைவசமய வளர்ச்சிக்கு தொடர்ந்து நல்ல முறையில் தொண்டாற்ற மேலும் பல திட்டங்களை வகுத்துள்ளது.

## மடுத்திருநாள்; விசேஷ ரயில் சேவை

கோட்டை, வியா:
மடுப் பெருநாளை முன்னிட்டு விசேஷ ரயில் சேவையை நடாத்த புகையிரத இலாகா நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 6-ம் திகதி முதல் 17-ம் திகதி வரை மடு வீதியிலுள்ள ரயில் நிலையங்களில் மடுவுக்குச் சென்று திருபுவதற்குக் குறைந்த கட்டணத்தில் டிக்கெட் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான மேலதிக விபரங்களை ரயில் நிலையங்களில் பெற்றுக்கொள்ளும்படி பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர்.

மடு உற்சவம் ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடைகிறது.

---


## குறை நீங்கியது

கைதடி, வியாழன்
கைதடி தேசிய வீடமைப்புத்திட்டத்திலுள்ள 10 வீடுகளுக்கும் பொதுவாக ஒரு கிணறு வெட்டப்பட்டிருந்தது. வீட்டோடு சேர்ந்த ஒன்றரை பரப்புக் காணியும் ஒரு கிணறும் புளக்கத்திற்குத் தங்களுக்கும் போதாதென முன்னைய அரசங்க மந்திரியிடம் புகார் செய்திருந்தனர்.

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



முதலாவது பரிசு ரூபா 5000-00
இரண்டாவது பரிசு ரூபா 3000-00
மூன்ருவது பரிசு ரூபா 2000-00

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிருர்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவருதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனுல் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.


வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, மே/பா. மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், த. பெ. இல. 319, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதை யிட்டு எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்
பெயர்: ..............................
விலாசம்: ..............................
வியாபாரியின்
பெயர்: ..............................
விலாசம்: ..............................




ZENITH

…களைச் செயல்படுத்தவும் வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக ஐ. நா. உதவித் தலைமைக் காரியதரிசி டாக்டர் ரால்வ் பஞ்ச் நியூயோர்க்கில் தெரிவித்தார்.

## நேற்று மீண்டும் மோதல்

சூயஸ்கால்வாய் பகுதியில் இஸ்ரேலிய போர்விமானங்

## 'விஞ்ஞான சோஷலிசமே உண்மையானது'

மாவிட்டபுரம், வியா
''இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி முற்போக்குச் சக்திகளின் ஒற்றுமைக்காக இடையருது போராடி வந்துள்ளது. தற்பொழுது ஏற்பட்டிருக்கும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வெற்றியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பெரும் பங்குண்டு'' என கொக்குவில் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கக் கூட்டமொன்றில் பேசிய கம்யூனிஸ்ட் வாலிப இயக்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். விஷயானந்தன் கூறினுர். திரு. எஸ். வி. முதலி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

சோஷலிசம் பேசுவது தற்பொழுது ஒரு நாகரிகமாகிவிட்டதென்றும் சோஷலிசம் என்பது சகல பிரச்னைகளையும் திட்டமிட்ட அடிப்படையில் தீர்க்கக்கூடிய சமூக அமைப்பென்றும் அப்படியான ஒரு அமைப்பு வாய்ப்பேச்சால் மாத்திரம் ஏற்பட்டுவிடாதென்றும் கால்மார்க்ஸ் ஏங்கல்ஸ், லெனின் முதலியவர்களால்வளர்க்கப்பட்ட விஞ்ஞான சோஷலிசமே உண்மையான சோஷலிசம் என்றும் திரு. விஷயானந்தன் கூறினுர்.

— —

## பார்வையாளர் அரங்கு

புங்குடுதீவு, வியா.
புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி முதலாந்தர அதிபராகப் பதவியுயர்வு பெற்று இடமாற்றலாகிச் சென்ற திரு. இ. சச்சிதானந்தத்தின் ஞாபகார்த்தமாக அவரின் பெயரில் விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு ஒன்றை அமைப்பதற்கு ஆசிரியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

ஆகஸ்ட் 5-ம் திகதி இராப்போசன விருந்தளித்து முன்னுள் அதிபரைக் கௌரவிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

ஆடி மாதம் 15-ம் திகதி
[31-7-70]

மேஷம்- நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். சகலதுறைகளிலும் இன்று முன்னேற்றமுண்டு. சிறப்பான தினம்.

ரிஷிபம்- மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். எதையும் ஏற்று நடத்தக்கூடிய மனத்திடம் ஏற்படும். செல்வாக்கு வளரும்.

மிதுனம்- நண்பர் ஒருவரின் நடவடிக்கை கவலையைத் தரலாம். புதிய முதலீடுகளை இன்று தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

கடகம்- குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும், அதிக பேச்சு ஆபத்திற்கு இடமளிக்கும்.

சிம்மம்- மனக்கவலைக்கு இடமளிக்கும். கடமையில் தடை ஏற்படும். மது பானத்தை தவிர்க்கவும். குறுக்குவழிகளில் இறங்க வேண்டாம்.

கன்னி-அறவழிகளை மனம் நாடும். பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செலவுக்கு இடமுண்டு. இன்று மகத்தான தினம்.

துலாம்- இதயத்தில் இனிமை துள்ளும். பகைவர்கள் பணிவர். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு.

விருட்சிகம்- வேவிகளை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். சிக்கலான பிரச்னைகளை இன்று தள்ளிவைப்பது விரும்பத்தக்கது.

தனு- புதிய சூழ்நிலை உங்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கும். குடும்பவாழ்க்கை இன்று கற்கண்டுபோல் இனிக்கும்.

மகரம்- சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும்.

கும்பம்- நீண்டநாட்களின் பின்பு மகிழ்ச்சிகரமான சந்திப்பு இடம்பெறும். காதல்உலகில் நல்ல திருப்பம் ஏற்படும்.

மீனம்- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள் பிதாவழித் தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

திருநெல்வேலி, வியாழன்
திருநெல்வேலி சைவ முன்னேற்றக்கழகம் சைவசமய வளர்ச்சிக்கு தொடர்ந்து நல்ல முறையில் தொண்டாற்ற மேலும் பல திட்டங்களை வகுத்துள்ளது. வெள்ளிக்கிழமைகளிலும் குருபூசை தினங்களிலும் விசேட ஆராதனைகளையும் பஜனைகளையும் நடாத்தி இளைஞர்களைச் சைவப் பணியில் மேலும் ஊக்குவிப்பதென்றும், மற்றும் சமய சம்பந்தமான விழாக்களில் தமது பஜனைக்கோஷ்டியை சேர்த்து செய்துவரும் தொண்டை மேலும் விரிவுபடுத்துவதென்பதுமே இவர்கள் திட்டமாகும்.

மாலை நேரத்தில் இப்பகுதி மாணவ மாணவிகளுக்கு இலவச கல்வியூட்டும் பணியையும் திருநெல்வேலி சைவமுன்னேற்றக் கழகம் செய்து வருகிறது.

— —

## தொழிலாளர் கமிட்டி உத்தியோகஸ்தர்

வல்வெட்டித்துறை, வியா.
பருத்தித்துறை பஸ் டிப்போ தொழிலாளர்கமிட்டிக்கூட்டம், டிப்போ செயலாற்றுப்பகுதி உதவியாளர் திரு. வி. சபாபதிப்பிள்ளை தலைமையில் டிப்போ மண்டபத்தில் நடைபெற்றது.

ஸ்ரீலங்கா, தமிழரசு, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவிலான யூனியன் அங்கத்தவர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர், தலைவர்: எஸ். ரி. துரைராசா, உபதலைவர்: வி. காங்கேசு, காரியதரிசி: வி. ஏ. அதிரூபசிங்கம், உபகாரியதரிசி: ஏ. கனகரத்தினம். மற்றும் வி. இராமலிங்கம், கே. இராமகிருஷ்ணன், எஸ். குமாரசாமிப்பிள்ளை வி. செல்வநாயகம், கே. நடேசன், என். சிவானந்தசாமி எம். தவேந்திரன், என். கே. நடராக்சா ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு கிணறு வெட்டப்பட்டிருந்தது. வீட்டோடு சேர்ந்த ஒன்றரை பரப்புக் காணியும் ஒரு கிணறும் புளக்கத்திற்குத் தங்களுக்கும் போதாதெனமுன்னைய அரசங்க மந்திரியிடம் புகார் செய்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அரைப் பரப்புக் காணிகூடுதலாக கொடுக்கப்பட்டு 2 பரப்புக் காணியாக்கப்பட்டிருக்கிறது. புதிதாக ஒரு கிணறும் வெட்டப்படுகிறது.

—ı

## தர்மபுரம் மக்களின் குறை

விஸ்வமடு, வியா.
கிளிநொச்சி எம். பி. திரு. ஆனந்தசங்கரிக்கு தர்மபுரம் மக்களால் வரவேற்பளிக்கப்பட்டது. திரு. எஸ். புஷ்பராசா தலைமையில் நெத்தலி ஆற்றுப் பாலத்திற்கு அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இப்பகுதி மக்களின் குறைகள் அடங்கிய மகஜர் ஒன்றை எம். பி.யிடம் கையளித்தனர்.

'ஏழை மக்களின் குறைகளைத் தீர்க்கவே நான் வந்திருக்கிறேன்' என்று திரு. ஆனந்தசங்கரி பதிலளித்துப் பேசினுர்.

## 'வட்டார வித்தியாதரிசி பதவி முடிவுதிகதியைபின்போடுக'

யாழ்ப்பாணம், வெள்ளி
இம்மாதம் 24ம் திகதிய அரசாங்க வர்த்த மானியில் வட்டார வித்தியாதரிசி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. வழக்கம் போல இந்த வர்த்த மானியும் மூன்று நாட்கள் கழித்தே 24-7-70-ம் திகதியேயாழ்ப்பாணத்திற்கும் ஏனைய பிற ஊர்களுக்கும் வந்து சேர்ந்தது ஆனுல் குறிப்பிட்ட உத்தியோகத்திற்கு விண்ணப்பப்படிவங்கள் கோடும் இறுதித் திகதி இம்மாதம் 27ந் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

தங்கள் வாழ்க்கையில் மிகச்சில உத்தியோக உயர்வுகளையே அடையக் கூடிய அவலநிலையிலுள்ள ஆசிரியர்கள் இப்படியான சந்தர்ப்பம் தங்கள்கைக்கெட்டாமல் தவறிவிட்டதே யென்று மிக அதிர்ச்சியும் அதிருப்தியும் அடைந்துள்ளனர். இவ்வாசிரியர்கள் செய்த புகாரைத் தொடர்ந்து வடமாகாண ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. க. மகாலிங்கசிவம் விண்ணப்பங்கள் அனுப்பப்படும் இறுதித் திகதியைப் பின் போடுமாறு கல்விமா அதிகாரிக்கு அவசரத் தந்தியொன்று அனுப்பிவைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்று கல்வியானது ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு என்ற நிலையில் இல்லாது சமுதாயம் முழுவதும், ஒவ்வொரு மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள வாழ்க்கை முழுவதும் கல்வியின் எல்லைக்குள் அமைந்துவிட்டது வாழ்க்கையை நடத்துவதற்குரிய ஒரு சாதனமாக மட்டும் அமையாமல் மக்களின் அறிவு வளர்ச்சிக்கான வாய்ப்பும், கருத்துக்களைப் பற்றித் தொடர்ந்து ஆராய்வதற்கும் இன்றியமையாததாக விளங்குகின்றது. —விநோபாவே

# ஈழநாடு

Eelanadu N. tional Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 15-ந் திகதி (31-7-70)

## இஸ்ரேல் உறவு துண்டிப்பு

இஸ்ரேலுடனான ராஜீய உறவை இலங்கை அரசாங்கம் துண்டித்து விட்டது. இங்குள்ள தூதரகத்தை மூடிக்கொண்டு புறப்பட்டுச் செல்லுமாறு இஸ்ரேல் துணைத் தூதரை அரசாங்கம் கேட்டிருக்கிறது. மேற்காசியப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் இலங்கையின் இந்த முடிவு கவலையளிக்கிறதென்று இங்குள்ள இஸ்ரேலிய துணைத்தூதர் தெரிவித்திருக்கிறார், இஸ்ரேலுக்கு மட்டுமல்ல உறவைத் துண்டிப்பதில் இலங்கைக்கும் கூட மகிழ்ச்சியில்லை, ஆனாலும் இந்த முடிவை மேற்கொள்ளாமல்இலங்கை போன்ற சிறிய நாடுகள் தங்கள் சக்தியை வெளிப்படுத்தும் சூழ்நிலை இன்று இல்லை. எனவே ராஜீய உறவைத் துண்டித்துக் கொள்வதென்ற இலங்கை அரசின் முடிவையிட்டு இஸ்ரேல் கவலையடைவதைவிட இலங்கையுடன் மீண்டும் ராஜீய உறவை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதே சிறந்தது

இஸ்ரேலும் இலங்கையைப் போன்ற சிறிய நாடு தான். இஸ்ரேலியர்கள் சுயமுயற்சியால் முன்னேறிக் கொண்டிருப்பவர்கள். வல்லரசுகளின் 'விளையாட்டில்' சிக்கித் தவிக்கும் நிலையிலுள்ள நாடுகளில் இஸ்ரேலும் ஒன்று. இஸ்ரேலுடன் இலங்கைக்கு நேரடியாகப் பகையேதுமில்லை ஆனாலும் அதனுடனுள்ள ராஜீய உறவைத் துண்டிக்க இலங்கை முடிவுசெய்ததற்குள்ள காரணம் என்ன?

இஸ்ரேலியர்கள் சுயமுயற்சியுள்ளவர்களென்று

யுத்தத்தின்போது, தான் கைப்பற்றி ஆக்கிரமித்துக் கொண்ட பகுதிகளிலிருந்து வெளியேறாமல் 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற முறையைப் பின்பற்றிவருவது இலங்கை போன்ற சிறிய நாடுகளை வலிமைபொருந்திய நாடு ஏதாவது ஆக்கிரமித்தால் அதையும் நியாயமென்றே ஒப்புக்கொள்ளச் செய்வதாக முடியும். ஐ. நா. சபை நிறைவேற்றிய தீர்மானத்தையும், உலகநாடுகள் பலவற்றின் கோரிக்கையையும் மதிக்காமல் தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறுவதற்கு இஸ்ரேல் மறுத்துவருவது எந்த விதத்திலும் நியாயமாகாது. இஸ்ரேலின் செயல்களினால் சூயஸ்கால்வாயில் கப்பல் போக்குவரத்து தடைப்பட்டிருக்கிறது. இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்துவரும் பொருள்கள், சூயஸ்கால்வாயின் ஊடாக கப்பல்கள் வரமுடியாமல் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வரவேண்டியிருப்பதால், பொருளாதாரத்திலும் இலங்கையைப் போன்ற நாடுகள் பாதிக்கப்படுகின்றன.

இந்நிலையில் இஸ்ரேல் தனது தவறை உணர்ந்து திருத்திக் கொள்வதற்கு ராஜீய உறவைத் துண்டித்துக்கொள்வதைத் தவிர இலங்கை போன்ற நாடுகளுக்கு வேறுவழியில்லை. சமரசப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதாக இங்குள்ள இஸ்ரேலிய துணைத் தூதர் தெரிவித்திருக்கிறார். அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்காவின் சமரச யோசனையையாவது இஸ்ரேல் ஏற்றுக்கொண்டு மேற்காசியாவில் அமைதி ஏற்பட வழிவகுக்குமானால் துண்

# கிரேக்க தீவில் மறைந்து கிடக்கும் கொள்ளைக்காரனின் புதையல்

சிட்னி, ஜூலை 28

ஏறக்குறைய250ஆண்டுகளுக்கு முன்னர் கடற்கொள்ளைக்காரர் ஒருவர் பிரித்தானிய கப்பலிலிருந்து கொள்ளையடித்த தங்கம், வெள்ளி மற்றும் இதர அரிய பொருட்களை அடங்கியபுதையல்கிரேக்க நாட்டைச் சேர்ந்த தீவொன்றில் புதைக்கப்பட்டுள்ளது இதனைப் பகிர்ந்து கொள்வதில் இப்பொழுது பிரச்னை எழுந்துள்ளது.

புதையல்பற்றிய தகவல் சார்லஸ் வீட் என்ற அவுஸ்திரேலியர் ஒருவருக்குத் தெரிந்துள்ளது. இவருக்கு எப்படித்தெரிந்ததென்பதும் தனிக்கதையாகும்.

ஆவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தன்னுடைய மகளுக்குப் பரிசாககொடுப்பதற்கு சிட்னி நகரில் பழம்பொருட்கள் விற்கும் கடையொன்றுக்குச் சென்றார். அங்கே ஏராளமான பழையபொருட்கள் பரவிக்கிடந்தன. அவற்றுள் ஒரு இசைக்கருவி அவருக்குப் பிடித்தது 10 டொலருக்கு அதைப் பெற்றுச்சென்றவர் வீட்டுக்குக் கொண்டு சென்று திறந்து பார்த்தார். உள்ளே ஒரு தோல்பை இருந்தது அந்தத் தோல்பையை அவர் ஆராய்ந்தபோது அதனுள் பழையகன்வாஸ்துணிஒன்று காணப்பட்டது. அதை அவர் வடிவாகப் பார்த்தார். கீழே "புதையல் மாப் (தேசப்படம்) கப்டன் சார்லஸ் மட்பான் 1742—97 என்று குறிக்கப்பட்டிருந்தது.

பதினைந்து ஆண்டுகள் இந்த நபர் அந்த தேசப்படத்தை (மாப்)தன்னுடன் வைத்திருந்தார். பத்து ஆண்டுகளுக்கு முன்னர் திரு சார்லஸ் வீட் என்பவர் இந்த தேசப்படத்தையும் இசைக்கருவியையும் வாங்கினார். இசைக்கருவியுடன் இணைக்கப்பட்டிருந்த (மாப்) தேசப்படம் உண்மையானதா? என்பதைப்பற்றி ஆராய வீட் முயன்றார்.

ஊதா கீழ்க்கதிரைச்செலுத்தி அத்தேசப்படத்தை ஆராய்ந்தபோது அது கன்வாஸ் துணி ஒன்றினால் ஆனது என்பதையும் அந்த தேசப்படம் வரையப்பட்ட காலத்திலிருந்து எதுவித மாற்றத்துக்கும் உள்ளாகாதது என்பதையும் அறிந்தார். ஆயினும் அதுபற்றி மேலும் ஆராய்வதற்காக நியூசவுத்வேல்ஸ் சர்வகலாசாலையிலுள்ள ஏ ஜான்ஸன் என்ற பேராசிரியரிடம் எடுத்துச் சென்றார்.

பேராசிரியர் அதனை ஆராய்ந்து அது கையாற் தயாரிக்கப்பட்ட கப்பல் பாய்த் துணியால் ஆக்கப்பட்டது என்று தெரிவித்தார்.

இத் தகவலின்படி அது கப்பற் படையைச் சேர்ந்த ஒருவன் தயாரித்த தேசப்படம் என்பது உறுதியானது. அதன்பின்னர் வீட் அந்தக் கப்பற் தலைவன் பற்றி அறியும் பணியை மேற்கொண்டார்.

18ம்நூற்றாண்டில் காப்டன் சார்லஸ் மட்பான் என்பவர் பிரபல கடற்கொள்ளைக்காரர் என்பதையும் பிரிட்டிஷ் கப்பல்களை அவர் கொள்ளையடித்திருக்கிறார் என்பதையும் ஊர்சிதம் செய்து கொண்டார்

இதன்பின் சார்லஸ் வீட் தன்னுடைய நண்பர் ஒருவருடன் கூடி கிரேக்கைச் சேர்ந்த தீவுக்குச்சென்றார், தேசப் படத்தின் துணையுடன் அவர் குறிப்புக்களை ஆராய்ந்தபோது தேசப் படத்தில் குறிக்கப்பட்ட அடையாளங்கள் அங்கே புதையல் உண்டென்பதற்கு அத்தாட்சியாக விளங்கின.

ஆனால் திரு. வீ புதையலை எடுக்க எந்த விதமான முஸ்தீபுகளும் செய்யவில்லை. காரணம் கிரேக்க அரசாங்கத்தின் அனுமதியின்றி அப்புதையலை எடுத்துச்செல்ல முடியாதென்பதே. அத்துடன் புதையல் இருக்கின்றதென்பதைப் பற்றிக்கூட அவர் ஊர்ஜிதம் செய்யவில்லை'

அவர் அப்படி இடத்தை ஊர்ஜிதம் செய்து தோண்டி அடையாளங்களைக் காட்ட முற்பட்டால் அதனை வேறு எவரேனும் பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடும்.

இதன்பின் அவர் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பி விட்டார் 'கிரேக்க அரசாங்கத்தின் கையிலேதான் எல்லாக் காரியமும் உள்ளது. என்னுடன் கிரேக்க அரசாங்கம் உடன்பாட்டுக்கு வரவில்லையானால் அப் புதையலைப் பற்றிய மர்மமும் புதையுண்டே போய்விடும்',

இவ்வாறு திரு சார்லஸ் வீட் தெரிவிக்கின்றார் புதையுண்டிருக்கும் புதையலின் பெறுமதி இன்றைய மதிப்புப்படி ஏழரைக்கோடி ரூபா வரை இருக்குமெனத் தெரிவிக்கின்றார்.

## முசலிப்பிரிவு விளையாட்டு விழா

முசலி, வியா

'உலகத்தில் வாழும்எல்லா மனிதர்களும் தாங்கள் நினைத்தவிஷயத்தில் வெற்றி காண்பதில்லை சிலர் வாழ்க்கையில் வெற்றியை அனுபவிக்கின்றார்கள் சிலருக்குத் தோல்வி ஏற்படுகின்றது. எனவே மக்கள்எல்லோருமே வெற்றியையும் தோல்வியையும் சமமாக ஏற்கப்பழக வேண்டும்' என முசலிக்காரியாதிகாரி பிரிவு மூன்றாவது வருடவிளையாட்டு விழாவின் 1-ம் நாள் நிகழ்ச்சியில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திரு சங்கரப்பிள்ளை சதிர்காமநாதன் கூறினார் இவ்விளையாட்டுவிழா முசலிக்காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சபையால் நானாட்டான் மேற்கு கிராமசபை மத்திய மைதானத்தில்நடைபெற்றது.

25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி, இரட்டை மாட்டுவண்டிச் சவாரி, விநோத உடைப்போட்டி ஆகியன சிறப்பு அம்சமாக இருந்தன. கிராமசேவையாளர் பிரிவு அடிப்படையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் வங்காலை புனித ஆனாள் விளையாட்டுக் கழகம்முதலிடத்தையும் முருங்கன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2வது இடத்தையும் பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சிலாவத்துறைஇராணுவபொறுப்பதிகாரி காப்டன்குக் பரிசில்கள் வழங்கினார். விழா இறுதி நிகழ்ச்சியின் போது முசலிக்காரியாதிகாரி திரு. வை. சொக்கலிங்கமும் மன்னார் வவனியா மாவட்ட விளையாட்டுப் பரிசோதகர் திரு. ஆர். கே. துரைராஜாவும் உரையாற்றினர். விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு எம். ஏ. தியாகராசா விழா ஒழுங்குகளைக் கவனித்தார்.

## ஜயாறன் எழுதுவது:

செனட் சபையிலே சென்ற திங்களன்று அரசியலமைப்பு சபை பற்றிய விவாதம் நடந்துள்ளது. இதன் விபரங்கள் அடங்கிய "ஹன்ஸார்ட்" எனும் அதிகாரபூர்வமான அறிக்கை நேற்று தபாலில் கிடைத்தது ஆவலுடன் உள்ளே பிரித்துப் பார்த்தேன். ஆனால் ஏமாற்றம் எல்லாம் சிங்களத்தில்தான் சிங்களம் தெரியாத என்னைப் போன்றவர்கள் ஊமையாய் செவிடர்களாய்க் கிடக்க வேண்டியதுதானா?

பார்லிமெண்டிலே அரசியலமைப்பைப்பற்றிய விவாதங்கள் எல்லாம் அநேகமாக சிங்களத்தில்தான் நடைபெறுகிறதா தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசத் தடையில்லைத்தான். தமிழ் எம். பி மார்கள் தமிழில் பேசுகிறார்கள். இஸ்லாமிய மெம்பர்கள் ஆங்கிலத்தில் பேசுகின்றனர், சிங்களவர் தங்கள் தாய்மொழியில் தான் அநேகமாகப் பேசுகின்றனர். அவர்கள் பேசுவதென்னவென்பது தமிழர் உள்ளிட்டு சிங்களம் தெரியாதவர்களுக்கு உடனுக்குடன் தெரியவேண்டும்.

சபையிலே உடனுக்குடன் மொழிபெயர்க்கும் வசதியைச் செய்திருக்கிறார்கள் சிங்களப் பேச்சுகள் உடனுக்குடன் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன தமிழ் எம். பி. மார்கள் மொழிபெயர்ப்புகருவிகளைக் காதில் வைத்துக்கேட்க முடிகிறது. ஆனால் சபைக் கலரிகளில் வந்திருக்கும் தமிழ்ப் பொதுமக்களுக்கு மொழிபெயர்ப்பு வசதி இல்லாமையால் இது ஒன்றும் புரிவதில்லை. சென்றவாரம் பார்லிமெண்ட் சபைக்குச் சென்று அரசியல் அமைப்பு சபைபற்றிய விவாதத்தை 'பார்த்தேன்." எல்லாம் சிங்களத்தில் ஒன்றும் புரியவில்லை. அங்கு இனியும் இருப்பதில் பயனில்லைஎன்று வெளியே செல்ல நினைத்த போது, நல்லவேளையாக நியமன மெம்பரான ஏ. அஸீஸ் ஆங்கிலத்தில் பேசினார். இருந்து கேட்டேன்

சோல்பரி கமிஷன் இங்கு வந்து விசாரணை செய்த போது, அவர் அஸீஸை ஒரு கேள்வி கேட்டாராம் "இந்தியர்களாகிய நீங்கள் இங்கு சிறுபான்மையோர். இலங்கைக்கு அரசியல் சுதந்திரம்

கிலப் பேச்சுகள் உள்ளிட்டு இவ்விவாத மனைத்தையும் தமிழில் விபரமாக "ஈழநாடு" வெளியிடவேண்டுமென்றும், ஒரு தனி அனுபந்தமாகவெளியிடலாமென்றும் ஓர் அன்பர் பார்லிமெண்ட் சபையில் சந்தித்துக் கூறினார். நாட்டின் தலையெழுத்தைப் பற்றிய விவாதம் ஆதலால், இது எவ்வளவுமுக்கியமென்பதை விளக்கத்தேவையில்லை.

இந்த விவாதம் மட்டுமன்றி, சபை நடவடிக்கைகள் அனைத்தையும் தமிழிலும் உடனுக்குடன் மொழிபெயர்த்து வெளியிடவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை. இதில் சற்றே சிரமமிருக்கலாம். என்றாலும் மனமுண்டானால் வழியுண்டு மூன்று மொழிகளிலும் இல்லாவிட்டாலும் சிங்களத்திலும் தமிழிலுமாவது இந்த விவாத விபரங்களை வெளிவரச்செய்யத் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் தமிழ் எம். பி, மார்கள் இதை வற்புறுத்தினால் இச்சமயம் பயன் இல்லாமற் போகாது.

0 0 0

நாளை ஆடி அமாவாசை இந்துக்களுக்கு மிகவும் புனித நாள். ஆயிரக்கணக்கானவர்கள். கீரிமலை தீர்த்தத்தில் தீர்த்தமாடுவர். அப்பர் சுவாமிகளுக்கு திருவையாற்றிலே கைலாசக் காட்சி அளித்த புனித நாளும் அன்றேயாகும்.

0 0 0

மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளுடன் பாடி—போதோடு நீர்சுமந்தேத்தி புகுவாரவர் பின் புகுவே, யாதும் சுவடுபடாமல் ஐய றடைகின்றபோது காதன் மடப்பிடியோடும் களிறுவருவனக்கண்டேன்—கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்.

— அப்பர் அடிகள்

## வேதசாஸ்திர பயிற்சி

பண்டத்தரிப்பு, வியா

கண்டி தேசிய குருமடத்தில் வெவ்வேறு சபைகளை சேர்ந்த 6 கன்னியர்கள் வேதசாஸ்திரக் கல்வியில் பயிற்சி பெற்று வருகின்

# 'இரு மொழிகளிலும் ஆட்சி நடத்த புதிய அரசியலமைப்பு விரைவில் வரும்'

### வல்வையில் தெகியோவிட்ட எம். பி. தகவல்

வல்வெட்டித்துறை, வியாழ

"பல்லாண்டு காலமாக இந்த நாட்டில் தமிழரும் சிங்களவரும் ஒன்று பட்டு சமத்துவமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் அதே போன்றுஎன்றும்வாழவேண்டும் என்பதற் ாகவேதான்

கலந்து கொண்டு தெகியோவிட்ட எம் பி பேசினார்

வழக்கறிஞர் திரு. ஆ. நா. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்திரு. [illegible] தொடர்ந்து பேசுகையில் [illegible] தாவது:-

எமது அரசாங்கம் சிங்க

அதனைவளம் படுத்துவதற்கு இருசாராரும் [illegible] உழைக்க வேண்டும்

காலம் சென்ற தர்மகுல சிங்கம் சோஷலிசம் பேசிய [illegible] அவரைப் பலவா[illegible] இகழ்ந்தனர். ஆனால் இன்று இகழ்[illegible] வர்களே சோஷலிசம் [illegible]கிறார்கள்

## நவநாள்

பண்டத்தரிப்பு, வியாழன்

மாரீசன் கூடல் புனித கயித்தார் முனீந்திரரின் திருநாளுக்கான நவநாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. 7ம் திகதி இரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகப் பகையேதுமில்லை ஆனாலும் அதனுடனுள்ள ராஜீய உறவைத் துண்டிக்க இலங்கை முடிவுசெய்ததற்குள்ள காரணம் என்ன?

இஸ்ரேலியர்கள் சுய முயற்சியுள்ளவர்களென்றாலும், திறமைசாலிகளென்றாலும் 967-ம் ஆண்டில் அரபுநாடுகளுடன் நடந்த

...தெரிவித்திருக்கிறார். அரபு நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்காவின் சமரச யோசனையாவது இஸ்ரேல் ஏற்றுக்கொண்டு மேற்காசியாவில் அமைதி ஏற்பட வழிவகுத்தால் துண்டிக்கப்பட்ட ராஜீய உறவை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வது கடினமாயிராது.

## "ஹோட்டல்களைப் பொறுப்பேற்கும் நோக்கம் அரசுக்கில்லை"

— கலுகல்லே

கோட்டை, வியாழன்

'தனியார் ஹோட்டல்களை எடுத்து நடாத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. ஹோட்டல்காரர்களின் லஞ்ச நடவடிக்கைகளைத் தடை செய்வதற்காக மேற்பார்வை முறையொன்றைக் கொண்டு வருவதுபற்றியே அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது'.

மேற்கண்டவாறு உல்லாசப் பிரயாண அமைச்சர் திரு பி. பி. ஜி. கலுகல்லே நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார் அமைச்சர்மேலும் இவ்விடயம் சம்பந்தமாகக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

கடந்த சில மாதங்களாக உல்லாசப் பிரயாணத் தொழிலில் அரசாங்கம் என்ன நோக்கம் கொண்டிருக்கின்றது என்பது குறித்து மக்களிடையே தவறான அபிப்பிராயம் நிலவியது. என்ன நடைபெறுகிறது என்று அறிய அரசாங்கத்துக்கு உரிமையுண்டு மேலை நாடுகளில்கூட நாட்டுமக்களின் நலன்கருதி அரசாங்கம் ஹோட்டல்களை மேற்பார்வையிடுகிறது.

உல்லாசப் பிரயாணத் தொழிலில் பெரும் வருமானம் அடையத் தனியார் துறையினருக்கு அரசாங்கம் ஊக்கமளிக்கும். இத் தொழிலில் ஈடுபடும் தனியார் ஸ்தாபனங்கள் இத் தொழிலை வளர்ச்சியுறச் செய்து நாட்டுக்கு அதிக அளவில் அன்னிய செலாவணியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

## திருவடிநிலையில் சங்காபிஷேகம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் திருவடிநிலை வாகை வயிரவர் கோவில் மகா சங்காபிஷேகம் இன்று பகல் நடைபெறுகிறது. விசேட அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும் நிகழும். சனிக்கிழமை அதிகாலை ஆடி அமவாசை தீர்த்தம் திருவடிநிலையில் நடைபெறும்.

.........

## சைவமங்கையர் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சைவமங்கையர் சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. 'மாறும் சமுதாயத்தில் இந்து மகளிரின் பங்கு' என்ற கருத்தரங்கும் கலை நிகழ்ச்சிகளும் முக்கிய அம்சமாக இடம்பெறுகிறது.

## கோபுர வேலை ஆரம்பம்

சங்கானை, வியாழன்

மூளாய் பிள்ளையார் கோவில் முன் கோபுர கட்டட வேலைகள் ஊர்ப்பொது மக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் கோபுரம் அமைக்கப்படும்.

— —

## உள்ளூராட்சி ஆணையாளர்

கோட்டை, வியாழன்

பல வருடங்களாக உதவி உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. சேர்லி டி. அல்விஸ் உள்ளூராட்சி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர் திரு. அல்விஸ் உள்ளூராட்சி அமைச்சில் உதவிச் செயலாளராகவும், வைத்தியப் பகுதியில் உதவி டைரக்டராகவும் கடமைபுரிந்தவர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

''பல்லாண்டு காலமாக இந்த நாட்டில் தமிழரும் சிங்களவரும் ஒன்று பட்டு சமத்துவமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள் அதே போன்றுஎன்றும்வாழவேண்டும் என்பதற்காகவேதான பெரும்பான்மையாகிய நாம் தமிழ் மக்களை நேசக்கரம் நீட்டி அழைக்கிறோம் நாம் ஒன்று பட்டு வாழ்வதன் மூலம் இந்நாட்டை ஒரு முன்னேற்ற நாடாக்க முடியும்'' எனதெகியோவிட்ட எம். பி. திரு. தனபால வீரசேகரா வெல்வெட்டித் துறையில் கூறினார். சமசமாஜக் கட்சி உறுப்பினராயிருந்த காலஞ்சென்ற செ. தர்மகுலசிங்கம் (ஜெயம்) ஞாபகார்த்த விழாவில் வழக்கறிஞர் திரு. ஆ. நா. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்திரு. வீரசேகராதொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எமது அரசாங்கம் சிங்களத்திலும் தமிழிலும் ஆட்சி செலுத்துவதற்குரிய புதிய அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்த முற்பட்டுள்ளது அது விரைவில் நிறைவேற்றப்படும். தமிழ் மகன் ஒருவனுக்குமதிப்புக்கொடுப்பதற்காகவே தான் இங்கு வந்தேன் எங்களிடத்தில் சிங்களவன், தமிழன் என்ற பிரச்னையோ' மொழிப் பிரச்னையே கிடையாது. பொருளாதாரப் பிரச்னை தான் எங்கள் பிரச்னை வேண்டும்

காலம் சென்ற தர்மகுலசிங்கம் சோஷலிசம் பேசிய காலத்தில் அவரைப் பலவாறாக இகழ்ந்தனர். ஆனால் இன்று இகழ்ந்தவர்களே சோஷலிசம் பேசுகிறார்கள் எல்லாக் கட்சிகளுமே இன்று சோஷலிசம் பேசுகின்றன. சிங்கள மக்கள் முன்னேற வேண்டும் என்றால் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தையும் பெறவேண்டும்''

திருவாளர்கள் பி. நாகலிங்கம், ஏ.விசுவநாதன் ஆர். ஆர், தருமரத்தினம், எஸ், பி. இராசா, பாலசிங்கம், இராமச்சந்திரன் ஆகியோரும் பேசினர்.

## கலைமன்ற நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

பண்ணாகம் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கலைமன்றத்தை ஆரம்பித்துள்ளனர் தலைவராக பண்டிதர்: ப. இராசகுருவும் உபதலைவராக அ. தி. அப்புத்துரையும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இணைக்காரியதரிசி த. மோகனநாவுக்கரசு அ. விவேகானந்தன் தனாதிகாரி: பொ. கறுவல்தம்பி நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

— —

## இஸ்ரேல்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் பிரிட்டிஷ் கம்பனிகள் சிலநடந்துவருவதாகவும் இதற்குமாற்று நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கவேண்டுமென்றும் பிரதமர் திருமதி பண்டாரநாயகா மந்திரி சபைக்குத் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

— —

## உருத்திரபுரம்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பொலிசார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

1ம் எதிரி சார்பில் வழக்கறிஞர் திரு எஸ் அம்பலவாணர் ஆஜராகியிருந்தார். 2ம் 3ம், 4ம் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு வி. செல்லத்தம்பி ஆஜரானார்.

சாவகச்சேரி மஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா விசாரணையின்பின் எதிரிகள்மூவரையும விடுதலைசெய்து. முதலாம்எதிரியை மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜராகும்படி உத்தரவு பிறப்பித்துள்ளார்"

## அம்பன்கோஷ்டி முதலிடம்

முசலி, வியாழன்

நெடுங்கண்டல் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட வெற்றிக்கேடயத்துக்கான மென்பந்தாட்டப் போட்டியில் முதலாவது இடத்தை அம்பன் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும் 2-வது இடத்தை நானாட்டான் அரசாங்க ஊழியர்கழகமும் பெற்றன,

## இன்று ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சில்லாலை கத்தோலிக்க வாலிபர் சங்கம் தனது 18-வது ஆண்டு நிறைவு விழாவை இன்று கொண்டாடுகிறது. சில்லாலை ஆரோக்கியமாதா ஆலயமுன்றலில் மாலை ஆரம்பமாகும்.

இவ் விழாவில் கரங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அதிகாரி திரு ஜோக்கிம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சில்லையூர் செல்வராசனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல் சிறப்பம்சமாக அமையும்.

எம் இ பயஸ் அடிகளார் கி மு. ச. தலைவர் திரு நீயேம்ஸ், கவிஞர் முருகையன், யாதர் முன்னேற்றச் சங்கத் தலைவி திருமதி பேளி அத்தனுசியார், பண்டத்தரிப்பு ப ச தலைவர் திரு றேக் சூசைப்பிள்ளை, திரு தென் புலோலியூர் மு கணபதிப்பிள்ளை, தவத்திரு என். சவரிமுத்து அடிகளார். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, வித்துவான் கே. என். வேலன் ஆகியோர் விழாவில் உரை நிகழ்த்துவர் நாட்டுக்கூத்து நாடகம், நடனம், மற்றும் இசைநிகழ்ச்சிகளும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக திருக்கோணமலைக்குச் சென்றிருந்த, பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் அங்கிருந்து, வெற்றியுடனும் தோல்வியுடனும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளது.

திருமலை 'புளூபேட்ஸ்' விளையாட்டுக் கழகத்துடன் முதலில் நடந்த போட்டியில், வெற்றி பெற்றது. இப் போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம் 1—0 கோலால் புளூபேட்ஸை தோற்கடித்தது. இக்கோலை சென். அன்ரனிஸ் கோஷ்டியின் முன்னணி வீரர் கொன்ஸலஸ் போட்டார்.

திருமலை 'ஒலிம்பிக்ஸ்' கழகத்துடன் நடந்த மற்றுமொரு போட்டியில், ஒலிம்பிக்ஸ் கழகம் வெற்றி பெற்றது.

ஆட்டமுடிவில் ஒலிம்பிக்ஸ் கோஷ்டியினர் 4—2 கோல்களால் வெற்றி பெற்றனர். இந்த நன்கு கோல்களையும் மேற்படி கழகத்தின் முன்னணி வீரர் வடிவேல் போட்டார்.

சென். அன்ரனிஸ் கோஷ்டியின் சார்பில் வலதுகரை முன்னணிவீரர் பீற்றபெலிஸ் இரு கோல்களையும் போட்டார்

இப் போட்டிக்கு திரு. அரியநாயகம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி

## மாணவர் அவதி

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்கள் குடிதண்ணீர் வசதியின்றி கஷ்டமுறுகின்றனர். கிணறு இருந்தும் தண்ணீர் அள்ளுவதற்கு கயிறு இல்லாததால் கடந்த சில மாதங்களாக இவ் அவலநிலை நீடித்து வருகிறதாம்.

## நவநாள்

பண்டத்தரிப்பு, வியாழன்

மாரீசன் கூடல் புனித கயித்தார் முனீந்திரரின் திருநாளுக்கான நவநாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. 7ம் திகதி திருநாட் பூசையுடனும் சொரூப சுற்றுப் பிரகாரத்துடனும் உற்சவம் முடிவடையும்.

சில்லாலை புனிதகதிரை மாதா ஆலய உற்சவம் 1ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 14 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும். 15ம் திகதி திருநாட் பூஜை சுற்றுப்பிரகாரம் என்பன வற்றுடன் திருநாள் பூர்த்தியாகும்

— —

## நிதியுதவி

நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலய ஆசிரியர்கள் நாட்டைக்காக்கும் நிதிக்காகத் தமது ஒருநாட் சம்பளத்தை வழங்கியுள்ளனர்.

— —

## சிலைகள் நிறுவ முடிவு

அம்பாந்தோட்டை, வியா

காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவின் சிலை ஒன்றினையும் திருவள்ளுவர் சிலை ஒன்றினையும் பெரிய கணவரைத் தோட்டகோவில் மைதானத்தில் அமைக்க நமுனுகுல, பெரியகணவரைத் தேட்ட இடதுசாரி தொழிற்சங்கத்தைச் சேர்ந்த முற்போக்கு வாலிபர்கள் முடிவுசெய்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

திரு. கணபதிப்பிள்ளை மலாயன் பென்சனியர் காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், இராசரத்தினம், தருமரத்தினம், கந்தரத்தினம், நேசமணி ஆகியோரின் தகப்பனாரும், விசுவரத்தினத்தின் மாமனாரும் ஆவார், அவரின் பூதவுடல் இன்று முற்பகல் இல 11. கற்பகவிநாயகர் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து ஈமக்கிரியைகளுக்காக மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினரும் நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும். 3028

வந்து விசாரணை செய்த போது, அவர் அஸீஸை ஒரு கேள்வி கேட்டாராம் ''இந்தியர்களாகிய நீங்கள் இங்கு சிறுபான்மையோர். இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைப்பதாயின், உங்கள் நல உரிமைகள் பாதுகாக்கப் படமுடியுமா?''

இதற்கு அஸீஸ் அளித்த பதிலில், ''5000 மைல் தூரத்திலுள்ளவர்களை நம்பி இருப்பதை விட, எங்கள் சிங்களச்சகோதரர்களை நம்ப விரும்புகிறோம்.'' என்று பதிலளித்ததாகவும் தெரிவித்தபோது. சபையில்அமைச்சர் உட்பட பலரும் கை தட்டி பாராட்டுத் தெரிவித்தனர். ஆனால் விவாதத்தின்போது மிகக் குறைந்தவர்களே இருந்தனர். பத்திரிகைகளில் இப்பேச்சு விவரங்களெல்லாம் வெளியாக முடியாது.

சபையிலே ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதையும் விட்டுவிட்டார்களாம். உண்மைதானா? சிங்கள, ஆங்

பண்டத்தரிப்பு, வியா

கண்டி தேசிய குருமடத்தில் வெவ்வேறு சபைகளை சேர்ந்த 6 கன்னியர்கள் வேதசாஸ்திரக் கல்வியில் பயிற்சி பெற்று வருகின்றனர். இதற்கு முன்னர் இப் பயிற்சிகளைப் பெற இந்தியா ஐரோப்பா ஆகிய இடங்களுச்குச் செல்லவேண்டியிருந்தது தொடர்ந்தும் கன்னியர்களுக்கு இக் குருமடத்தில் பயிற்சி நடைபெறுமெனத் தெரிகிறது.

## பாரிஸ்டர்கள்

கோட்டை, வியாழன்

லண்டனிலுள்ள சட்டக் கல்வி மன்றங்களில் பயிற்சி பெற்று பாரிஸ்டர் பட்டம் பெற்ற 126 வெளிநாட்டு மாணவர்களுள் ஐவர் இலங்கையைச்சேர்ந்தவர்களாவர் அவர்கள் செல்வி சரோஜினி அரியநாயகம், திரு பி, டி. அல்வின், திரு. வி பி மலலசேகரா, திரு எச் ஆர் கேரத் திரு ஏ டி டி சில்வா ஆகியோரே குறிப்பிட்ட ஐவருமாவர்.

## செவிடர் குருடர் பாடசாலைக்கு மூன்றாவது தடவையும் முதலிடம்!

கைதடி, வியாழன்

மீசாலை வீரசிங்கம் வித்தியாலயத்தில், தென்மராட்சிப் பிரிவு 'சாரணர்' இயக்க வருடாந்த விழா தொடர்ந்து மூன்று நாட்களாக நடைபெற்றது.

போட்டிகளில் பங்கு கொண்ட தென்மராட்சிப் பாடசாலைகளில் கலந்து கொண்ட பார்வையிழந்த, செவிப்புலனற்ற கைதடி நவீல்ட் செவிடர் குருடர் பாடசாலை மாணவர்கள் முதலாம் இடத்துக்கான வெற்றிக் கேடயத்தைத் தட்டிக்கொண்டனர்.

சாரணர் வேலை பார உழைப்பாலும் இவர்களே தென்மராட்சிப் பகுதியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக முதலாம் இடத்தைப் பெற்று அதற்குரிய கேடயத்தையும் தட்டிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

— —

## கால்நடைகள் கொல்லப்படுகின்றன

விஸ்வமடு, வியா.

விஸ்வமடு பிரதான வீதிகளில் பகல் இரவு நேரங்களில் நடமாடும் கால்நடைகள்சுடப்பட்டு இறைச்சியாக்கப்படுவதாக புகார் செய்யப்படுகிறது. கடந்தவாரம் நான்குகால்நடைகள் இவ்விதம் சுடப்பட்டதாம். இவற்றில் ஈடுபடுபவர்களைக்கண்காணிப்பதில் விஸ்வமடு இராணுவத்தினரின் உதவி கோரப்பட்டுள்ளதாம்.

## புதிய உபதலைவர்

உடுப்பிட்டி, வியா

உடுப்பிட்டி கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் புதிய உபதலைவராகப் பொலிகண்டி வட்டார உறுப்பினர் திரு. வீ, எஸ். சுப்பிரமணியம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## சம்ரோக்ஷண கும்பாபிஷேகம்

மாவிட்டபுரம் வியாழன்

கதவு பூட்டப்பட்ட நிலையில் மாவைக்கந்தன் ஆலயத்தில் 'சம்ரோச்சன' கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

மாவைக் கந்தன் ஆலயம் 21 நாட்கள் பூட்டப்பட்டதையடுத்து சண்டாளபிராயசித்தம் செய்யப்பட்டு காலை பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள், து. சண்முகநாதக்குருக்கள், கு. நகுலேஸ்வரக்குருக்கள் (கீரிமலை ஆதீனகர்த்தா), ஐ. வைத்தியநாதக்குருக்கள் ஆகியோரால் சம்ரோச்சன கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. 21 நாட்கள் கதவு பூட்டப்பட்டு பூசை, நைவேத்தியங்கள் தடைப்பட்டதாலேயே இச்சம்ரோச்சன கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org